# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

<u>2012–2013ஆம் ஆண்டுக்கான அறிவிப்புகள்</u>

(மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்படுபவை)

**1. சறுக்கு விளையாட்டிற்கான உள் விளையாட்டரங்கம் அமைத்தல்**

சறுக்கு விளையாட்டினை பிரபலப்படுத்தவும் மற்றும் எல்லாவித கால நிலைகளிலும் நீண்ட நேரம் பயிற்சி பெறுவதற்கு ஏதுவாக சென்னை பல்நோக்கு உள் விளையாட்டரங்க வளாகத்தில் சறுக்கு விளையாட்டிற்கான பாலியுரித்தீன் தளத்துடன், மின்னொளி மற்றும் பார்வையாளர் இருக்கை வசதிகளுடன் கூடிய உள் விளையாட்டரங்கம் ரூபாய் பன்னிரெண்டு கோடி செலவில் அமைக்கப்படும்.

**2. முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகள்**

முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு ரூபாய் ஒரு கோடி செலவில் இறகுப்பந்து, நீச்சல், மேசைப்பந்து மற்றும் டென்னிஸ் விளையாட்டுக்களில் நடத்தப்படும். இப்போட்டிகளில் முதல் பரிசு வெல்பவர்களுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சமும், இரண்டாம் பரிசு வெல்பவர்களுக்கு தலா ரூபாய் எழுபத்தைந்தாயிரமும், மூன்றாவது பரிசு வெல்பவர்களுக்கு தலா ரூபாய் இருபத்தைந்தாயிரமும் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

3. **விளையாட்டு அறிவியல் மையம் அமைத்தல்**

விளையாட்டு மருத்துவம் (Sports Medicine), விளையாட்டு உளவியல் (Sports psychology), விளையாட்டு உடற்கூறியல் (Sports Physiotherapy), உயிர்இயந்திரவியல் (Bio-mechanics), சத்துணவியல் (Nutrition), மறுசீரமைப்பியல் (Rehabilitation), ஊக்கமருந்து எதிர்ப்பு (Anti Doping) போன்ற வசதிகளுடன் கூடிய விளையாட்டு அறிவியல் மையம் தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூபாய் இரண்டு கோடியே இருபது இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

4. **கடற்கரை விளையாட்டுப் (Beach Games) போட்டிகள் நடத்துதல்**

கடற்கரை விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிக்கும் வண்ணம் கடற்கரை கால்பந்து (Beach Football), கடற்கரை கபாடி (Beach Kabaddi), கடற்கரை கையுந்துபந்து (Beach Volleyball) போன்ற விளையாட்டுக்களில் போட்டிகள் நடத்தப்படும். இப்போட்டிகள் பத்து கடலோர இடங்களில் ரூபாய் இருபத்தைந்து இலட்சம் செலவில் நடத்தப்படும்.

5. **நீர் விளையாட்டுக்கள் (Water Sports) மற்றும் வீரமிக்க விளையாட்டுக்களை (Adventure Sports)அறிமுகப்படுத்துதல்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து நீர் விளையாட்டுக்களான படகோட்டுதல்

(Rowing), பாய்மர படகோட்டுதல் (Sailing), இலகுவான படகோட்டுதல் (Kayaking & Canoeing) மற்றும் வீரமிக்க விளையாட்டுக்களான மலையேறுதல், பாராசூட் குதித்தல் போன்ற விளையாட்டுக்களை மாநிலத்தில் அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூபாய் இரண்டு கோடி செலவிடப்படும்.

**6. சென்னை பல்நோக்கு உள் விளையாட்டரங்கத்தில் குளிர்சாதன வசதி மற்றும் மின்னொளி அமைப்புகளை மாற்றி அமைத்தல்**

சென்னை பல்நோக்கு உள் விளையாட்டரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள குளிர்சாதனவசதி, மின்னொளி மற்றும் ஒலி அமைப்புகள் அனைத்தும் பதினாறு ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டதால் அவைகள் ரூபாய் பத்து கோடி செலவில் மாற்றி அமைக்கப்படும்.

**7. மாற்றுத் திறனாளிகளுக்கு மாநில அளவிலான போட்டிகள் நடத்துதல்**

மாற்றுத் திறனாளிகளான உடல் ஊனமுற்றோர், கண் பார்வையற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் காது கேளாதோர் ஆகியோருக்கு ரூபாய் முப்பது இலட்சம் செலவில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.

**8. புதிய இளைஞர் நலன் இயக்குநரகம் அமைத்தல்**

இளைஞர்களிடையே சமூகப் பணி, இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சிகள், சாகசப் பயிற்சிகள் போன்றவைகளின் மூலம் ஆளுமைப் பண்பை வளர்த்திடவும், இளைஞர்களின் ஒட்டுமொத்த

மேம்பாட்டிற்காகவும் இளைஞர் நலனுக்கென தனியே இயக்குநரகம் ஒன்று அமைக்கப்படும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் பதவி சார்பான இயக்குநராக செயல்படுவார்.

**9. சென்னை ஓப்பன் சூப்பர் இறகுப்பந்து போட்டிகள் நடத்துதல்**

சென்னை ஓப்பன் டென்னிஸ் மற்றும் சென்னை ஓப்பன் ஸ்குவாஷ் போட்டிகளைப் போன்று ஆண்டுதோறும் சென்னை ஓப்பன் சூப்பர் தொடர் இறகுப்பந்து போட்டிகள் நடத்தப்படும். இதற்காக ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கப்படும்.

**10. நீச்சல்குளங்கள் அமைத்தல்**

குளியலறை மற்றும் வடிகட்டுதல் வசதிகளுடன் கூடிய நீச்சல்குளங்கள் நாமக்கல் மற்றும் திருவள்ளூர் மாவட்ட விளையாட்டரங்கங்களில் ரூபாய் இரண்டு கோடி செலவில் அமைக்கப்படும்.

**என். ஆர். சிவபதி,**
பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும்
இளைஞர் நலத்துறை அமைச்சர்.